# இக்கட்டான நிலையில் மீன்பிடித்தல்

## பாக்குக்குடா பிரதேசத்தில் எல்லைதாண்டும் அத்துமீறல் ஓர் ஆய்வு

ஏ.எஸ். சூசை ; ஜே. இஸ்கொல்டன்; எம். பாவின்க்

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்திய இழுவைப் (டோலர்) படகுகள் பாக்குக்குடா நீர்ப் பிரதேசத்தில் இலங்கை கடலாதிக்கப் பரப்பினுள் அத்துமீறி நுழையும் சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் குறித்த செய்திகளையே 1990 ஆம் ஆண்டின் பின்னர், இலங்கை மற்றும் இந்திய பத்திரிகைகளில், அடிக்கடி தலைப்புச் செய்திக்குரிய விடயமாக இருந்து வருகின்றது. பாக்குக்குடா மோதலில் சேர்த்துக் கொண்டுள்ள புதிய பரிமாணங்களான, இலங்கையின் வடபிராந்திய மீனவமக்களின் யுத்தத்திற்கு பின்னரான நிலைமை மற்றும் அண்மைக்கால இயல்பு நிலைக்கு திரும்புதல் ஆகிய அடிமட்ட உண்மை நிலவரங்களை வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். இரண்டாவது நோக்கம் யாதெனில், மோதலின் இயல்பு நிலைமைகளை புரிந்து கொள்வதும், தற்போது ஆட்சியியலின் கீழ் இருப்பதும், அவர்களால் முன்மொழிந்துள்ள தூமான பரிந்துரைகளின் தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்வதுமேயாகும். பாக்குக்குடா மோதலானது, இந்தியாவின் பரவலாக அறிந்திருக்கின்ற இது பற்றிய உள்ளார்ந்த எண்ணங்களுக்கு மாறுபட்டதாக தற்போது தொழில்நுட்பம் வளங்குன்றிய இலங்கை மீனவர்கள் இந்திய இழுவைப்படகு மீனவர்களினால் பாதிக்கப்படுவதை நாம் இங்கு விவாதிக்கின்றோம். இந்திய தரப்பினர், மோதலின் இயல்பு நிலைமையை விளங்கிக்கொள்ளாத வரைக்கும், இலங்கையின் அதிகாரம் அளிக்கப்பட்டோர் மீனவர்களையும் அவர்களது அரசாங்கத்தையும் நெருக்கமாகக்கொண்டு வராத வரைக்கும் அரசாங்கம் மற்றும் மீனவர் மட்டங்களிலான சகல விதமான மோதல் தீர்வு முயற்சிகளும் வினைத்திறனற்றவைகளாகவே இருக்கும் என இக்கட்டுரையின் முடிவில் குறிப்பிடுகின்றோம்.*

**திறவுச்சொற்கள் :**

**அறிமுகம்**

தமிழ் நாட்டு மீனவர்கள் "எமது வீட்டின் கொள்ளைக்காரர்கள்" எனக்கருதிய இலங்கை மீனவர்கள், வட இலங்கையின் மீனவ நகரமான பருத்தித்துறையில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றுகூடினர். சிறியரக மீனவ படகுகளை உபயோகித்து இலங்கை கடல் ஆதிக்க எல்லையினுள் மீன் பிடித்துக்கொண்டிருந்த நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 18 இந்திய இழுவைப் படகுகளையும் 112 மீனவர்களையும் பிடித்துத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர். இச்சம்பவத்தின் ஒரு நாள் கழிந்த பிறகு, இதே பாணியிலான நடவடிக்கையாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் "டோலர்" படகுகள் தரித்து நிற்கும் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 7 படகுகளும், அதன் வேலையாட்களும் இலங்கை வட பகுதி மீனவ பிரதேசமான மாதகல் மீனவர்களால் பிடிக்கப்பட்டனர். இந்திய மீனவர்களும், மீனவ படகுகளும் இரண்டு நாட்களின் பின்னர் உயர்மட்ட அரசியல் இராஜதந்திர தலையீட்டினால் இந்தியாவிற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டாலும் இலங்கை மீனவர்கள் தமது தெளிவான நிலைப்பாட்டினை எடுத்துக்காட்டியுள்ளனர். ''அண்ணனுக்கு''

எதிராக தம்பி கிளர்ந்து எழுந்திருந்த இச்சம்பவத்தினைப்பற்றி, சில வாரங்களாக மீனவ சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களும், பத்திரிகைகளின் தலைப் புக்களும் அரசியல் நகர்வுகளும் காத்திரமான அம்சங்களாகக் காணப்பட்டன. அத்துடன் இந்நிலைமையானது, இப்பிராந்தியத்தில் காணப்படும் மீனவ மோதல்களின் பல்வேறுபட்ட பரிமாணங்களை எடுத்துக் காட்டுவதற்கான சிறந்த உதாரணம் எனலாம்.

தொழில்நுட்ப ரீதியாக பலமிக்க இழுவைப் படகுகளுக்கு எதிராக சிறிய அளவிலான இயலுமைக்கொண்ட மீனவ சமூகங்கள் எழுச்சி கொண்டமை தென் ஆசியாவில் இது முதல் தடவை அன்று. (Bavinck 2001, 2011b, Kurien and Achari 1988) இழுவைப் படகுகளினால் பாரியளவிலான கடல் வளங்கள் சூறையாடப் படுவதனால் சிறியமட்ட மீனவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகுவதோடு அவர்களுடைய மீனவ உபகரணங்கள் பாரியளவில் அழிவுக்கு முகம் கொடுப்பதனால் ஏற்படும் அந்தியின் பிரதிபலிப்பாகவே இவ்விதமான மேலெழுச்சிகள் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டில் பாரியளவிலான மிகப் பெரிய இழுவைப்படகு மீனவர்களுடன் யுத்தத்திற்குப் பின்னர் மீள் உருவாக்கம் பெற்று வருகின்ற இலங்கையின் வடபகுதி சிறிய மட்ட மீனவர்கள் இத்தகைய மோதல்களில் ஈடுபடுவதானது, இங்கு பாரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. இவை அனைத்திற்கும் அப்பால், இவ்விரு சாராரும் பாக்குக்குடாவில் ஒரே மீன்பிடி தளத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிளவு, தனித்துவமானதாகவும் ஒருவகையில் இதனைப் புரிந்துகொள்வதற்கு இடர்பாடாகப் இருப்பதற்குமான காரணம் என்னவெனில், இது இயல்பாக அமைந்துள்ள பாக்குக் குடா கடலாதிக்கங்களின் எல்லைகளைத் தாண்டுதலுமே ஆகும்.


பாக்குக்குடாவானது, சராசரி 9 மீற்றர் ஆழமும், குறைந்தளவிலான நீரலைகளையும் கொண்ட ஒப்பீட்டளவில் ஆழமற்ற அமைதியான குடாவாகும். இதனுடைய வடக்குமுனையானது, வங்களாவிரிகுடாவுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. தெற்கில் இதனை, சிறிய தீவுக் கூட்டங்களும் இராமர் (ஆதம்) பாலம் - என பிரபல்யமாகக் குறிப்பிடப்படும் பவளப்பாறைகளும் மன்னார் குடாவிலிருந்தும் பிரிக்கின்றன. பருவகால உணவுகாவிச் செல்லும் நீரோட்டங்களினால், பாக்குக்குடாவானது மிகச் சிறந்த மீன்வளம் மிக்கதொன்றாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, பருத்தித்துறை பேதுரு மீன்களம், இறால்களம் மற்றும் முத்துக்களம் என்பன முக்கியமானவையாகும். (Sivasubramaniam 1995)

யுத்தத்துக்குப் பின்னர் இயல்புநிலைக்குத் திரும்பும் இலங்கை வடபகுதி மீனவத் தொழில் துறை பாக்குக்குடா மோதலோடு எவ்விதம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது என்பதை அறிந்துகொள்ளும் நோக்கத்தைக் கொண்டதாகவே இவ் ஆய்வு காணப்படுகின்றது.

கீழ்வரும் இரண்டு பகுதிகளும், எண்ணக்கரு ரீதியிலமைந்த எழுத்துமூலமான ஆக்கங்களையும், வரலாற்றின் அடிப்படையில் விளங்கும் வெளிப்பாடுகளையும் தருகின்றன.

பகுதி 4 ஆய்வின் வழிமுறையை விவரிக்கிறது. அத்தோடு தொடர்கின்ற பகுதி இலங்கையின் வடபகுதி மீன்பிடித்துறையின் தற்கால போக்குகளையும், 6 ஆவது பகுதியானது யுத்தத்துக்குப் பின்னர் இயல்புநிலைக்குத் திரும்பும் இலங்கை வடபகுதி மீன்பிடித் தொழிற்றுறை, இந்திய இழுவைப் படகுகளினால் எதிர்கொள்ளும் தாக்கங்களை மதிப்பிடுகின்றது. மீனவர்களும் அரச நிறுவனங்களும் மற்றும் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGOS) பாக்கு மீன்பிடித் துறையில் உள்ள இவ் இக்கட்டான நிலைமையை எவ்வாறு எதிர்கொண்டன என்பதை இதன் 7 ஆம் பகுதி ஆய்வு செய்கிறது. இறுதியாக, பகுதி 8, அரசும் சிவில் சமூகமும் இதனை எதிர் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்துகிறது.

படம் 1, எல்லைதாண்டிய கடலாதிக்கங்களில், பாக்குக் குடாவினதும் பாக்கு நீரிணையினதும் அமைவிடம்.




மூலம்: Soosai and Stokke 2006

**02) மீன்பிடி மோதலை விளங்கிக்கொள்ளுதல்.**

மீன்பிடி மோதல்கள் உலகளாவியவை ஆகும். தவிரவும் அவை, பல்வேறு வகையில் தம்மை வியாக்கியானப்படுத்துகின்றன (Platteau 1989, Charles 1992, Bennett et al. 2001) உணவு விவசாய ஸ்தாபனத்தின் கூற்றுப்படி பொதுவாக, மோதல்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் மோதிக்கொண்டு மற்றைய தரப்பினரின் நலன்களை ஒரு தரப்பினர் சுவீகரித்துக் கொள்ள லாகும். இவ்விதமான சுவீகரிப்பு - நலன் காப்பு முயற்சிகளால் ஏற்படும் மோதல்கள் மீன் வளம் மீன்களம் - மீன்பரப்பு அல்லது சந்தை வாய்ப்புக்கான வழிகள் ஆகியவற்றின் மீதான போட்டியின் பிரதிபலனாகவும் இருக்கலாம். (Bavinck 2005) இத்தோற்றப்பாட்டை விரிவுபடுத்த மல்தூஸிய வாதநவ அடிப்படையில் இயற்கை வளங்களின் இருப்பில் படிமுறையாக ஏற்படும் தேய்வுகள் மோதல்களுக்கான முக்கிய காரணியாக உள்ளது. (Homer - Dixon 1994).

இயற்கை வளங்கள் மீதான மோதல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு நலன் அடிப்படையிலான அணுகுமுறை பயன்மிக்க ஆரம்பத்தினை வழங்கினாலும் அது நிறுவனங்களினதும் சட்டத்தினதும் வகிபாகத்தினை உதாசீனப்படுத்துகின்றது. நோர்த் (1992) பொருளியல் விவகாரங்கள் மீதான நிறுவனங்களது வகிபாகங்கள் மீது கவனம் செலுத்தும் போது சட்ட மானுடவியலாளர்கள் சட்ட பன்மைத்துவத்தின் சார்பு நிலைமையைச் சுட்டிக் காட்டுகின்றனர். (Benda - Beckmann 2002) மானுடவியலாளர்களது கூற்றின் தொடராக மோதல்களில் ஈடுபடும் மீனவத் தரப்பினர் பல்வேறு சமூக - சட்ட முறைமை பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர், எதனை நியாயம் எனநோக்குகிறனரோ அதுவே இவர்களுக்கிடையே இவ்வேறுபாடு தோன்றக் காரணம் ஆகும். என Bavinck (2005) விவாதிக்கின்றார். ஜோன்சன் மற்றும் பேவின்க் (2010) ஆகியோர் 1950 களின் பின்னர் இந்தியாவில்

உருவான நிலப்புரட்சி சட்ட ரீதியான பன்மைத்துவ தோற்றப்பாடுகளுடன் தொடர் புபட்டிருப்பதாக கூறுகின்றனர். எனவே இவ்வாறான உள்ளார்ந்த நிலைமைகளை கருத்திற் கொள்ளும்போது, இம் மீனவ மோதல்களைபரந்துபட்ட அணுகுமுறையில் விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், சமூக - சட்ட ஒழுங்கமைப்புக்கள் மற்றும் நிறுவன ஏற்பாடுகள் மீது கட்டாயமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மீனவ மோதல்களை வினைத்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்யும் திட்டவட்டமான எவ்வித முறைகளும் இல்லை (Ostrom 2007) இங்கே மீனவ மோதல்களை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான நிறுவனங்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. (Kooiman et al. 2005). ரெபோபோட்டின் (1974) சமூக மோதல்கள் பற்றியபகுப்பில் முக்கிய இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக உள்ளக - வெளியக மோதல்களுக்கிடையிலான வித்தியாசமாகும். இரண்டாவதாக, மோதல்களை சமச்சீரான மற்றும் சமச்சீரற்ற மோதல்கள் என அவர் வேறு படுத்துகின்றார்.

உள்ளக மோதல்களில் மோதும் தரப்பினர், நிலையான அரசினைக் கொண்டு நடாத்த தங்களுக்கே உரித்தான ஒரு பொறிமுறையைக் கொண்டுள்ளனர். இப்பொறி முறையானது, குறித்த தரப்பினர்களுக்கிடையே மோதல் தீர்வு அல்லது கட்டுப்பாடு என்பனவற்றைக் கொண்டுள்ளது Rapoport's (1974). மறுபுறத்தில் வெளியக மோதல்களைப் பார்க்கின்றபோது, அதன் மோதல் தரப்பினர் எவ்விதமான பாரிய அளவிலான நிறுவன முறைமைகளுக்கும் உட்படாதவர்களாகவும், அதனால் மோதலைத் தீர்க்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற எவ் விதமான இணைந்த பொறிமுறைகளையும் கொண்டிராதவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்விதமானதொரு சிந்தனைத் தொடரில் Bavinck, (2011 b). ஆந்திர மாநில மற்றும் தமிழ் நாடு மீனவர்களுக்கிடையே ஏற்படுகின்ற மீனவர் யுத்தம் - மீனவர் மோதல் குறித்துக் கலந்துரையாடும்போது, ஒரே மாநில மீனவர்களுக்கிடையே இடம்பெறும் யுத்தத்தை விட, வேற்று நாட்டு மீனவர்களுக்கிடையேயான மோதலானது நீடித்த கால இழப்பையும் பாரிய அழிவினை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது எனக் குறிப்பிடுகின்றனர்.

இதன்மூலம் விளங்குவது யாதெனில், வெளியக மோதல்களில் ஈடுபடும் மோதல் தரப்பினரை, ஒரு ஆட்சிப் பொறிமுறையின் கீழ் கொண்டுவருவது கடினம் என்பதாகும். ஆகவே அவற்றை ஓர் உள்ளக மோதலாக மாற்ற இயலாது. (Rapoport) இன் இரண்டாவது வேறுபாடானது. மோதல்கள், சமச்சீரானவை மற்றும் சமச்சீரற்றவை என்ற அடிப்படையில் பகுத்து நோக்குகிறார். ஒப்பீட்டளவில், சமச்சீரான மோதல்களின்போது, எதிரிகள் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பர். அதேவேளை, சமச்சீரற்ற மோதல்களின்போது, பரந்தளவிலான நம்பிக்கை வரட்சியோடு ஒருவரையொருவர் அறிந்திருக்கக்கூடிய முறையில் தரப்பினர்கள் அடுத்தடுத்து நிலை கொண்டிருக்கப்படலாம்.

இவ் வேறுபாடுகளானவை, மீனவத் தொழில் போன்ற சமூக ஆற்றல்மிக்க ஒரு முறைமையில் இவ்விவகாரத்தில் அதிகாரமும் அதனால் ஏற்படும் தாக்கமும் அறிமுகப்படுத்தப்படும் (Jentoft 2007). ரெபோபோட்டினுடைய மேற்கூறிய தலைப் பினை விரிவாக விவாதிக்கும்போது, சமச்சீரற்ற மோதலானது தமக்குள்ளேயே தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் சட்ட அங்கீகாரம் அளிக்கும் முறைமைகளை எதிர்த் தரப்பினர் மீது ஏற்படுத்தித் கொண்டிருக்கும். இளர்ச்சியாளர்கள் தங்களை சமூக மாற்றத்தின் கருவிகளாக எடுத்துக் காட்டுகின்றனர். இரு தரப்பினரும் (போதுமான அளவு) நியாயமான தீர்வெனக் கணிக்கும் ஓர் ஒப்பந்தத்தை, இடையீடு செய்து எளிதாக்கும் வசதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஒரு சாரார் தாம் விரும்புவதை மற்றத் தரப்பினர் மீது திணிப்பதைத் தடை செய்வதே இங்கு ஆட்சியாளர் எதிர்நோக்கக்கூடிய ஒரு சவாலாக அமையலாம்.

### 03) பாக்குக்குடா மீனவ மோதல்: எல்லைகளை வரைதல்


ஆயிரக்கணக்கான பத்திரிகைக் கட்டுரைகளுக்கு அப்பால், பல ஆண்டுகாலமாக பல்வேறு கோணங்களில் பாக்குக்குடா மீனவ மோதல்கள் பற்றி பல்வேறு அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இந்தக் கட்டுரையின் சேர்வையானது, பாக்குக்குடா மீனவர்களின் நாடுகடந்த அடையாளங்கள் பற்றி விசேட கவனம் செலுத்துகின்றது. (Gupta 2009) இந்திய இழுவைப்படகு மீனவர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள இழுவைப்படகுகளை மீளப்பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியத் தன்மை (Sathyapalan et al. 2007), இலங்கை மீனவர்கள் மீது சிவில் யுத்தம் ஏற்படுத்திய பாரிய பாதிப்புக்கள் (Soosai and Stokke 2006 and Stokke and Soosai 2007). அதேபோல் பாக்குக்குடா பிரதேசத்தில் இழுவைப்படகுகள் மீதான ஆட்சியியல் பிரச்சினைகள் எவ்விதம் பாதிக்கின்றன என்பது பற்றிய விசாரணைகள் (Scholtens and Bavinck Forthcoming) ஆகியன இடம்பெறுகின்றன. இன்னும் அதிகமானதும் முழுமையானதுமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இழுவைப் படகுகளின் திடீர் அத்துமீறல்களினால் ஏற்படுகின்ற இலங்கை கொள்கைகள் மீதான தோற்றப்பாடுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விவரணங்களை உள்ளடக்கியதாக இலங்கைக் கண்ணோட்டம் காணப்படுகின்றது. (Subramanyam Raju et al. 2006. Hettiarachchi 2007, Amarasinghe 2011) இந்திய கண்ணோட்டத்தினூடாகப் பார்க்கின்றபோது, கச்சதீவு மற்றும் சர்ச்சைக்குரிய கடல் எல்லைக்கோட்டு உருவாக்கத்தின் இயல்பு பற்றிய சட்ட, அரசியல் விடயங்களின் விரிவான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதாக பல அண்மைக்கால வெளியீடுகள் கூறிக்கொண்டிருக்கின்றன. (Suryanarayan 2004 and *2009*). விவேகானந்தன் (2004, 2010a, 2010b, 2011) மீனவ மோதலின் பல்பரிமாண விடயங்களை 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டு கலந்துரையாடல்களினூடாக கோடிட்டுக் காட்டியுள்ளார். (7 ஆவது பகுதியைப் பார்க்க.) இந்த வெளியீடுகளானவை இவை அனைத்தையும் உள்ளடக்கியதும் இம் மோதலுக்கான காரணிகள், சிக்கல் தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பல்பரிமாண நோக்கங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

### 3.1 இந்திய இழுவைப் படகுகளின் எழுச்சி

இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட பசுமை புரட்சியை போன்று 1960 களின் பின்னர் இழுவைப் படகுகளின் அறிமுகத்துடன் இந்திய மீன்பிடித்துறையில் "நீலப் புரட்சி" ஏற்பட்டதெனலாம். (Johnson and Bavinck 2010) இழுவைப் படகுகளின் பிரவேசமானது. பாக்குடாவில் செறிந்து காணப்பட்டது. 1980 மற்றும் 1996 காலப்பகுதிகளில் மாத்திரம் இப்பிரதேசத்தில் கடல் மீன் உற்பத்தி இரு மடங்காக அதிகரித்தது. (பார்க்க அட்டவணை 2). இது அந் நாட்டினுடைய மொத்த உற்பத்தியில் வெறும் 38 சதவீதம் அதிகரிப்பாகும். (Vivekanandan 2010a). சத்தியபாலன மற்றும் அவருடைய சகாக்களின் (2007) கருத்துப்படி, ஒப்பீட்டு ரீதியாக மிகச் சிறிய பிரதேசமான பாக்குக்குடாவில் 2500 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இந்நிலமையானது, பாக்குக்குடாவின் பரப்பளவுக்கு அதிகமான இழுவைப் படகுகள் பயன்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. இது தமிழ் நாட்டு சிறியரக மற்றும் பாரிய ரக தொடர் தேச்சியான மீன்பிடி முறையினால் மீன் இருப்புக்களின் போக்கில், பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. (Johnson and Bavinck 2010 Scholtens and Bavinck forthcoming). மீன் தளங்களில் கிடைக்கப்பெறுகின்ற அளவுக்கும் அதிகமான மீன்கள் இழுவைப் படகுகளினால் காவிச் செல்லப்படுகின்றன. இலங்கையில் யுத்தகாலப்பகுதியில் வெற்றிடமாகக் கிடந்த இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கத் தள்ளப்படுகின்றமையானது மேற்கூறிய விடயங்களுக்கு முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். தமிழ் நாட்டில் மொத்தம் 5300 இழுவைப் படகுகள் காணப்படுகின்றன (CMFRI *2005*) இலங்கைக் கடற்பரப்பில் அதிகளவு இலாபமீட்டும்முழுநேர அல்லது பருவகாலங்களில் அண்ணளவாக 2500 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. (Sathyapalan et al. *2007*, Vivekanandan *2010*)

இருபக்க ஒப்பந்தத்தின் மூலம், 1974 ஆம் ஆண்டு பாக்குக் குடாவின் இருபக்க இறைமைகளுக்கு உட்பட்ட விதமாகவே இக்கோடு பிரிக்கப்பட்டது. ஆயின், இக்கோடு, தமது பாரம்பரிய மரபு முறைக்கு உட்பட்ட மீன்பிடி எல்லைகளை ஊடறுப்பதாகவும், சட்டபூர்வமற்றதாகவும் உள்ளதென இந்திய இழுவைப்படகு மீனவர்கள் உரிமை கோருகின்றனர். இலங்கை கடற்படை மற்றும் அண்மைக்காலமாக இலங்கை மீனவர்களின் கூட்டணிகளால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டாலும் இந்திய மீனவர்கள் தமது இயலாமையினால் இலங்கை கடற்பரப்புக்குள் உள்ளிடுவதைத் தவிர்க்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக, இலங்கையின் சிவில் யுத்த காலத்தில் பல இழப்புக்கள், காயங்கள், பல துப்பாக்கித் தாக்குதல்கள் என்பவற்றோடு இலங்கை கடற்படையினரின் சந்தேகத்திற்கும் இந்திய மீனவர்கள் ஆளாகி இருந்தனர். தவிரவும் மக்கள், திட்டவட்டமான கணக்கெடுப்புக்களை ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும். அண்மைக்காலமாக 100 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டும் மேலும் 350 மீனவர்கள் கடுமையான தாக்குதல்களுக்கும் ஆளாகியுள்ளனர். (Suryanarayan 2009). விவேகானந்தன் (2011) கணிப்பீட்டின் படி. "யுத்த காலப்பகுதியில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் சுதந்திரமாக செயற்படக்கூடிய நிலைமை காணப்பட்டதுடன், இலங்கை சகோதரர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதில் இருந்தும் தடுக்கப்பட்டிருந்தனர்." இதனை மற்றுமொரு விதத்தில் கூறுவோமாயின் சிவில் யுத்தமானது இந்திய மீனவர்கள் இராணுவ ரீதியான அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கலாம். ஆனால் இலங்கை தரப்பில் மீன்பிடியில் ஏற்பட்ட இடைவெளி இந்திய மீனவர்களால் நிரப்பப்படுவதற்கும் வழிவகுத்தது எனக் கூறலாம்.

வரைபடம் 2: இந்தியா மற்றும் இலங்கைக்கும் இடையிலான பாக்குக் குடா மீன் உற்பத்தியின் (டொன்கள்) ஒப்பீட்டு நோக்கு.




மூலம்:- இந்தியா, 1980 - 2001 வரையிலான தமிழ் நாட்டு தகவல்கள், 2002 - 2010 வரையிலான தகவல்கள் (MFR), இலங்கை 1977 - 1982 வரையிலான தகவல்கள் இலங்கை அரசாங்கத்தினுடைய 2000. FAO 2003, 1983களுக்குப் பின்னரான மீனவர்கள் மற்றும் கடல் வளங்கள் (2011) மற்றும் சூசை 2006.

**3.2 வட இலங்கை மீன் பிடியும் சிவில் யுத்தமும்.**

பாக்குக் குடாவின் இலங்கையின் பக்கம், வட பகுதி மீனவர்கள் நீண்டகால சிவில் யுத்தத்தி லிருந்து தற்போது இயல்பு நிலைக்கு மீண்டு வருகின்றனர். சுமார் மூன்று தசாப்த காலம் இடம்பெற்ற இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்தத்தினால், பல மீனவர்கள் தமது மீனவக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். மட்டுமன்றி பாதுகாப்புக் காரணங்களுக்காக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்கும் பாரிய தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர், மீனவர்கள் மீண்டும் குறிப்பிட்ட பிரதேசங்களில் படிப்படியாக தற்போது மீள்குடியேறிக்கொண்டிருக்கின்றனர். மேலும், மீனவர்களுக்கான தடைகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மிகவும் மெது வாக அவர்கள் இயல்பு நிலைமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விதமாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் மீனவர்கள் தமது எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் தொடர்தேர்ச்சியான திடீர் தாக்குதல்கள் மற்றும் மீன்வலைகள் மீதான அழிவுகள் இலங்கை மீனவர் களின் வாழ்வாதாரத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இலங்கையின் சிவில் யுத்தத்திற்கு முன்னர், வட மாகாண மீன்பிடித்துறை மிகவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டதை அட்டவணை 2 எடுத்துக்காட்டுகின்றது. 1982 ஆம் ஆண்டு இலங்கையில் பிடிக்கப்பட்ட மொத்த மீன்களில் 25% (48000 டொன்) யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் பிடிக்கப்பட்டது. (Soosai and Stokke 2006). இந்திய அமைதிகாக்கும் படையின் வருகை மற்றும் 2002 - 2006 வரை காலப்பகுதியிலான யுத்த நிறுத்தம் போன்ற இரு இடைவெளிகளைத்தவிர, மற்றைய யுத்த காலப்பகுதியிலான வட பிராந்திய மீன் உற்பத்தி பூச்சியமாகவே காணப்பட்டது. மீன்பிடிப்பதற்கான தடைகள், மீனவ சமுகங்களின் பேரிடப்பெயர்வு மற்றும் மீன்பிடி உபகரண அழிவுபோன்ற இப்பிராந்திய மீன்பிடித்துறையின் வீழ்ச்சிக்கு பிரதான காரணியாகக் காணப்பட்டது. (Soosai and Stokke 2006) யுத்தம் முடிவடைந்து ஒன்றரையாண்டு காலப்பகுதியில், பெரும்பாலான மீன்பிடி உபகரணங்கள் படிப்படியாக பிரதியீடு செய்யப்பட்டதனால் யுத்தத்திற்கு முன்னர் காணப்பட்ட நிலையை விடவும் தற்போது 42% மாத்திரமே வளர்ந்துள்ளது. இது சமகால இலங்கை மீன்பிடியில் வெறும் 6 சதவீதம் மட்டுமே ஆகும். அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% ஆகும். (MFAR 2011) இதற்கு மறுபுறமாக இந்திய பக்கம் பார்க்கும்போது, யுத்த காலப்பகுதியில் இந்திய மீன்பிடி உற்பத்தி 3 மடங்காக அதிகரித்திருந்தது.

யுத்தமானது இலங்கை வட பகுதி மீனவ சனத்தொகை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 10% மான மீனவ குடும்பங்கள் தமது குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரை இழந்துள்ளதுடன் 89 சதவீதமானோர் குறைந்தது ஒரு தடவையாவது, இடப்பெயர்வுக்குஆளாகியும்உள்ளனர். (Soosai and Stokke 2007) பல மீனவ குடும்பங்கள், தொடர்ந்து நீண்டகாலங்களாக இடம்பெயர்ந்து கொண்டே இருந்தனர். இதற்கு அப்பால், பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன். ஒரு நாளில் சில மணிநேரங்கள் மாத்திரமே 1 கி.மீற்றருக்குள் இயந்திரமற்ற உபகரணங்களுடன் மீன்பிடித்தலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் மீன்பிடித்துறையில் "எல்லை கடந்த மீன் பிடியானது" புதியதொரு பரிமாணமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதை மறுக்க முடியாது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கைக் கடற்படையினருக்கும் இந்திய இழுவைப்படகுகளுக்கும் இடையிலான மோதல்கள், இலகுரக மற்றும் பாரியரக மீனவர்களுக்கு இடையிலான மோதலாகவே மாறியது. மேலும், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தெளிவில்லாத தருணங்களில் இடம்பெற்ற இந்திய மீனவர்களின் இறப்புகள்

பற்றி இந்திய அரசாங்கமானது, இலங்கை அரசாங்கத்தின் மீது ஏற்படுத்திய அழுத்தங்களின் விளைவாக, உண்மையான மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இலங்கை கடற்படையினரிடம் கண்டிப்பாக கொழும்பு கேட்டுக்கொண்டது. இலங்கை மீனவர்கள், இந்திய இழுவை மீனவர் கள் பற்றி இலங்கை கடற்படையினரிடம் முறை யிட்டு, அவர்களைத் துரத்துமாறு கெஞ்சிய போது, "எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள்; எங்கள் கரங்கள் (எங்களுடைய அமைச்சினால்) கட்டப்பட்டுள்ளன" என அவர்கள் தெரிவிக்கின் றனர். எங்களுடைய இந்த ஆய்வானது, இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள கையறு நிலையைத் தெளிவுபடுத்துகிறது. அது மாத்திரமன்றி, தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் அவர்களுடைய மீனவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் அதேவேளை, இலங்கை அரசாங்கமானது சக்தி வாய்ந்த அயல்நாட்டுடனான மோதலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## 04) ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது REINCORPFISH எனப்படும் செயற்திட்டத்தின் ஒருபகுதியாகும். இச் செயற்திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்கும் விஞ்ஞான ஆய்வுக்கான நெதர்லாந்து நிறுவனத்தின் நோக்கம் யாதெனில், பாக்கு நீரிணைப் பகுதி யில் இடம்பெறும் மீனவ மோதல்களைப் புரிந்துகொள்வதற்கு உதவுவதும் அவற்றின் தீர்வுக்குப் பங்களிப்புச் செய்வதுமேயாகும். (Netherlands Organisation for Scientific Research - NWO/WOTRO) 2011 ஆம் ஆண்டு வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 8 மாதகால கள ஆய்வினூடாகப் பெறப்பட்ட தர மற்றும் அளவு அடிப்படையிலான, தகவல்களை, இவ் ஆய்வு உள்ளடக்கியுள்ளது அளவு ரீதியில் அமைந்த உள்ளடக்கமானது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து கடலுக்குச் செல்லும் மீனவ குடும்பங்களின் (N=1120) நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டன. (அட்டவணை 1 ஐ பார்க்க.) பல்நிலை கொத் தணி மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு, இருநிலை செயன்முறைகளின் அடிப்படையில் மீனவ குடும்பங்களின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. (Bryman 2004). முதலாவதாக, பெரிய மீனவக் கிராமங்களுக்கு விகிதாசார அடிப்படையில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு, மொத்தம் 120 மீனக் கிராமங்களில் 36 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. இரண்டாவது நிலை, தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து எழுமாற்றாக, 28 மீனவக் குடும்பங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இந்தக் கள ஆய்வானது, 25 யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு 4 வாரங்களில் மேற்கொள்ளப்பட் டதுடன், 84% மான பதிலிறுப்பவர்களிடமிருந்து பதில்கள் கிடைக்கப்பெற்றிருந்தமையும் மாண வர்கள் உறுதிப்படுத்தினர்.

இதற்கு மேலதிகமாக இக்கட்டுரையின் முதற் கட்டுரையாளர் (J.Scholtens) மூன்று மாவட்டங்களிலும் உள்ள வித்தியாசமான கிராமங்களில் இருந்து, மீனவ சமூகத் தலைவர் களுடனான ஓரளவு கட்டமைக்கப்பட்ட திறந்த நேர்காணல்கள் மூலம் தர அடிப்படையிலான தகவல்களைப் பெற்றுக்கொண்டார். இவர் தொடர்ந்து இரண்டு மாதகால ஒழுங்கிலமைந்த பங்கேற்புடனான அவதானிப்புக்கள் மூலம், தெரிவுசெய்யப்பட்ட கரைநகர் மற்றும் மாதகல் ஆகிய மீன்பிடித்துறைகளில் விடய ஆய்வுகளை மேற்கொண்டார். 2006 மற்றும் 2007 காலப்பகுதியில் இந்திய பாக்குக் குடா பகுதிகளில் இந்திய இழுவைப்படகு சமூ கத்தினரிடையே 6 மாதகால கள ஆய்வினை இவர் ஏற்கனவே மேற்கொண்டிருந்தார். 1990 களின் பின்னரான தென்னாசிய மீன்பிடித்துறை பற்றிய அவதானிப்பாளராக இரண்டாவது கட்டுரையாளர் இருந்தார். அதேவேளை, வட இலங்கையில் மீன்பிடி சம்பந்தமாகப் பல வருடகாலம் கற்றுக் கொண்டிருக்கின்ற ஒருவராகவும் மூன்றாவது கட்டு ரையாளர் காணப்படுகின்றார்.

அட்டவணை 1 - குடும்ப ஆய்வின் மேலோட்டம்.

| கரையோர பிரதேசம் | மீனவ குடும்பங் களின் எண்ணிக்கை | கிராம சேவ பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம சேவகர் பிரிவுகள் | அங்கீகரிக்கப்பட்ட நேர்காணல்கள் | நேர்காணல் களின் தவீதம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் வடக்கு | 5,332 | 31 | 10 | 239 | 4,5 % |
| யாழ்ப்பாணம் தீவுகள் | 4,608 | 45 | 11 | 242 | 5,3 % |
| யாழ்ப்பாண நகரம் | 2,711 | 4 | 4 | 150 | 5,5 % |
| வன்னிக் கரையோரம் | 2,452 | 17 | 5 | 150 | 6,1 % |
| மன்னார் தீவுகள் | 2,398 | 23 | 6 | 144 | 6,0 % |
| மொத்தம் | 17,501 | 120 | 36 | 925 | 5,3 % |

மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம் 2011 மற்றும் MFARD 2011

## 5) வட இலங்கை மீனவர்கள்: தற்போதைய நிலை

யாழ்ப்பாண நகரில் இருந்து யாழ்ப்பாணக் குடாவின் மேற்குப் பகுதி வரையிலான யாழ்ப் பாணத் தீவுக்கூட்டத்தை ஒன்றுசேர்த்து, பருத்தித் துறையில் இருந்து மேற்குப் பக்கமாக 420 கி.மீ கரையோரப் பகுதியை உள்ளடக்கியதாகவும் இப்பகுதி யாழ்ப்பாணக் கடநீரேரியை ஊடறுத்து கடந்து செல்கின்ற போது கிளிநொச்சிக் கரை யோரம் போன்ற ஓரளவு குறைவான சனத்தொகை கொண்ட பிரதேசமும் மன்னார் மாவட்டத்தின் வடகரையோரம் (பலகை முனைமுதல்தேவன் பிட்டி வரை) மற்றும் மன்னார் தீவின் வடகரை யோரமும் (தலைமன்னார் முதல் பள்ளிமுனை வரை) இதில் அடங்குகின்றன. எல்லா திசை யிலும் கடல் மற்றும் களப்புக்களால் சூழப்பட்டு மிகக் குறைந்தளவான கைத்தொழில் மற் றும் சேவைத் துறைகளைக் கொண்ட இலங்கை யின் வட மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னர் மீன்பிடித்துறை மீதான செல்வாக்கு அதிகரிப் பதானது ஆச்சரியத்துக்குரிய விடயம் அன்று. 3 மாவட்டங்களிலும் 2011 ஆம் ஆண்டு மீன் பிடித்துறையில் ஈடுபட்ட குடும்பங்களின் மொத்தத் தொகை 28.639 (DFAR 2011)iii இத் தொகையானது அண்ணளவாக, 119000 மீனவ மக்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை எடுத்துக்காட்டுகின்றது. (2 ஆவது அட்டவணையைப் பார்க்க.) 871000 மொத்த சனத்தொகை கொண்ட இப்பிரதேசத்தை நோக்குகின்ற போது, இவ்வாறான எண்ணிக்கை இப்பிரதேச மக்கள் எந்தளவு மீன்பிடித் துறையில் தங்கிவாழ்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

அட்டவணை 2. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வாழ்கின்ற மீனவ குடித்தொகை

| மாவட்டம் | வகை | 1999 | 2011 | மொத்தக் குடித்தொகை 2011* | மீனவர்களின் சதவீதம் 2010 |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மீனவக் குடும்பங்கள் | 10,698 | 17,579 | | |
| | மீனவக் குடித்தொகை | 48,653 | 76,820 | 567,229 | 14 % |
| கிளிநொச்சி | மீனவக் குடும்பங்கள் | n,a | 3,220 | | |
| | மீனவக் குடித்தொகை | n,a | 12,000 | 103,717 | 12 % |
| மன்னார் | மீனவக் குடும்பங்கள் | 4,165 | 7,840 | | |
| | மீனவக் குடித்தொகை | 20,637 | 30,181 | 95,430 | 32 % |
| மொத்தம் | மீனவக் குடும்பங்கள் | n,a | 28,639 | | |
| | மீனவக் குடித்தொகை | n,a | 119,001 | 766,376 | 16 % |

மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம் 2011 மற்றும் MFARD 2011

யாழ்ப்பாண மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் விதிவிலக்காக சிறிதளவு "முக்கியர்" மற்றும் திமிலர் குழுக்களைத் தவிர "கரையார்" சாதியினரே மீன்பிடித்துறையில் பாரியளவு பங்களிப்புச் செலுத்துகின்றனர். மன்னாரைப் பொறுத்தமட்டில், பாக்குக் குடாவில் 30 கி.மீ க்கு அப்பால் காணப்படுகின்ற இந்திய மீனவ சாதியினரைப் போன்ற "பரதவர்" சாதியினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இம் மீனவப் பிராந்தியத்தில் 52 சதவீதமான கிறிஸ்தவர்களும் 40 சதவீதமான இந்து தமிழர்களுமே பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். எஞ்சிய 8 சதவீதமானவர்கள் மன்னார் தீவுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களாவர்.

வடமாகாண மீன்பிடித்துறையில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த படகு உபகரண இணைப்புக்கள் பாவனையில் உள்ளன. பொதுவாக 18 தொடக்கம் 23 அடி நீளமான "பைபர்" படகுகளும், மோட்டார் படகுகளுமே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இக்கொள்கலம் படகு என்பன 40 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் இயங்கக்கூடியதாகும். களப்பு மற்றும் கரையோரப்பகுதிகளில் கட்டுமரம் மற்றும் வள்ளம் போன்ற மரபு ரீதியான ஓடங்களும் இப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. இலங்கையின் நீலப் புரட்சியானது இரண்டாவது சிறிய வகையான 3.5 டொன் எடையுடைய (28- 32 அடி நீளமுடைய) 50 இற்கும் குறைந்த குதிரைச்சக்தியுடைய படகுகள் பாவனைக்கு வந்தன. யாழ்ப்பாண நகரம், வல்வெட்டித்துறை மற்றும் பேசாலை உள்ள துறைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் படுப்பு வலைப் படகுகளும் 200 பழைய இழுவைப் படகுகளும் இவற்றுள் அடங்கும். இறுதியாக, 444 படகு உரிமையாளர்களிடம் பெறப்பட்ட தகவல்களினடிப்படையில், 83 சதவீதமானவர்கள்1

படகையும், 15 சதவீதமானோர் 2 படகுகளையும், 2 சதவீதமானோரிடம் 2 அல்லது 3 இற்கு மேற்பட்ட படகுகளையும் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் எண்ணிக்கை, குறைந்த மட்டத்தில் முதலீடு செய்து உரிமை கொண்டுள்ள கொத்தணியினைக் குறிக்கும்.

*அட்டவணை 3: வடமாகாணத்திலுள்ள படகுவகைகளின் கண்ணோட்டம் (2010)*

| மாவட்டம் | ஒரு நாள் பகுகள் (உளளினை இயந்திரப் படகு) | கண்ணாடி நாரிழைப் படகுகள் | மரபுவழி - இயந்திரப் படகுகள் | மரபுவழி - இயந்திரபற்று படகுகள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 148 | 2,040 | 720 | 2,910 | 08 |
| கிளிநொச்சி | 0 | 170 | 90 | 100 | 00 |
| மன்னார் | 286 | 2,410 | 380 | 590 | 21 |
| மொத்தம் | 434 | 4,620 | 1,190 | 3,600 | 87 |
| | | | | | |
| யுத்தம் மற்றும் சுனாமியால் யாழ்ப்பாணத்தில் அழிக்கப்பட்ட படகுகள்* | 658 | 2,928 | 1,691 | 6,290 | ------ |

மீன்வகை, பருவகாலம் மற்றும் விசேடமான இடங்களுக்கு ஏற்ற விதத்தில் பல்வேறுவிதமான வலைகளை மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். படுப்புவலை மீன்பிடி தலையாயதாகக் காணப்படுகின்றது. இம் மீன்பிடி முறையினை சுறுசுறுப்பில்லாத மீன்பிடிப்பாணி முறை என அடிக்கடி கூறுவர். இப்படுப்பு வலைகள், இரவு நேரங்களில் கடலின் மேற்பகுதி, மற்றும் அடிப்பகுதிகளில் இடப்பட்டு பின்னர் இழுக்கப்படும். 1.5 அங்குல இழைகளைக் கொண்ட படுப்பு வலைகளை குரை, காரல் போன்ற வகை மீன்களைப் பிடிப்பதற்கு உபயோகிக்கின்றனர். சிறிய இழையங்களைக் கொண்ட தங்கூசி (அண்மையில் தடைசெய்யப்பட்ட) வலைகள், மன்னார் மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் நண்டுவகைகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. பாரிய படுப்புவலைகள் (6-18 அங்குல நீளமான) சுறா, சூரை, பாரை, அறக்குலா மற்றும் திருக்கைபோன்ற மீன் வகைகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளூர் மொழி வழக்கில் 'டிஸ்கோ வலை' எனப்படுபவை கரையோரம் மற்றும் பவளப்பாறைப் பகுதிகளிலும் பயன்படுத்தப் படுகின்றது. ஆழ்கடல் மீன்பிடித் தலுக்கான உபகரணங்களை மீனவர்கள் தம்மகத்தே கொண்டு காணப்படுகின்றனர்.

மேலும், இவற்றுக்கப்பால், மீனவர்கள் மரபுரீதியான உபகரணங்களான வலைகள், இறால்கள் கூடுகள், கரைவலை, வீச்சு வலை, நீள்வரிசைத் தூண்டில், சுருக்குமடி போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். பருவ காலத்துக்கேற்ப பல்வேறுவிதமான வலைகளைச் சொந்தமாக வைத்துக் கொள்ளல் அல்லது உரியவழிமுறைகளைக் கையாள்வது மீனவர்களுக்கு அத்தியாவசியமானது

என அறிஞர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். (Bavinck 2001) காரைநகர் அல்லது மாதகல் போன்ற பிரதேசங்களிலுள்ள வெற்றிகரமான மீனவர்கள் சூடைவலை, டிஸ்கோ வலை (1 அங்குல) அரக் கொட்டியான், 7 அங்குலவலை, (2-3 அங்குல) சிறகு வலையையும் சொந்தமாக வைத்திருக்கின்றனர்.

நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, 2009 தொடக்கம் 2011 வரையிலான காலப்பகுதிகளில் மீன்பிடியில் இருந்த பல்வேறு தடைகள் தளர்த்தப்பட்டும், பல்வேறு உயர் பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் இந் நிலைமை முற்றுமுழுதாக வழமைக்குத் திரும்பிவிட்டது எனக் கூறமுடியாது. பல கரையோரப்பிரதேசங்கள் இன்னும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப் படாமலும், மன்னார் மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் மீன்பிடிப்பதற்குக் கடற்படையினரிடம் அனுமதிபெற வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றன. வட மாகாணத்தின் நிலப் பிரதேசங்களில் கடற்படையினரும் இராணுவத்தினரும் பாரியளவில் நிலைகொண்டுள்ள அதேவேளை, முக்கியமான மீனவ துறைமுகங்கள் கடற்படையினரின் ஏகபோகக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்றன. யுத்தத்திற்குப் பின்னர், மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் முன்வைத்த கேள்விக்கொத்தினடிப்படையில் அவர்கள், எதிர்கொள்ளும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு தனிப் பிரச்சினைப் பற்றி வினவப்பட்டது. வறுமை மற்றும் குறைந்தளவு மீன்பிடி உபகரணங்கள் என்பதாகவும், 26% (2 மற்றும் 5) சதவீதமானோர், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய பிரவேசம் மற்றும் குறைந்தளவான மீனவ வளங்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதிப்பதாகவும் குறிப்பிட்டனர், அடுத்த பகுதியில் முதலாவது அம்சமாக வறுமை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய பிரவேசம் பற்றியும் ஆராய்வோம்.

அட்டவணை 4 : வடபகுதி மீனவர்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினைகள்

| நிலை | பிரச்சினை | வீச்சு | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | குறைந்த வருமானம் / வறுமை | 203 | 22% |
| 2 | இந்திய டோலர்களின் அத்துமீறல் | 180 | 19 % |
| 3 | குறைந்தளவு படகுகள் | 140 | 15 % |
| 4 | தடைசெய்யப்பட்ட வலைகள் | 83 | 9 % |
| 5 | குறைந்தளவான மீன் வகைகள் | 67 | 7 % |
| 6 | காலநிலை, நிச்சயமின்மை மற்றும் பருவகாலம் | 54 | 6% |
| 7 | பாதுகாப்பு (பாஸ்முறை, கடற்படை, உயர் பாதுகாப்பு | 45 | 5% |
| 8 | வலயம்) | 12 | 1% |
| - | தொழில் வாய்ப்பின்மை | 113 | 12% |
| - | ஏனையவை | 28 | 3% |
| - | பதிலில்லை | 925 | 100% |
| | மொத்தம் | | |

## 6) எல்லை தாண்டிய மீன்பிடி உள்ளூர்த் தாக்கம்

இந்திய இழுவைப்படகுகளினால், இலங்கைப் பொருளாதாரத்திற்குப் பாரிய தாக்கம் ஏற்பட உள்ளதாகப் பல அறிஞர்கள் எடுத்துரைத்தபோதிலும், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய பிரவேசத்தால் உள்ளூர் மட்டத்தில் வட பகுதி மீனவர்களின் ஜீவனோபாயத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்வதே எங்களது நோக்கமாகும். மீனவக் குடும்பங்களிலிருந்து பெறப்பட்ட

தகவல்களின் அடிப்படையில், 62சதவீதத்தினர் (N=569) இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்படுபவர்களாகவும், எஞ்சிய 38 சதவீதமானோர் மரபு ரீதியான படகுகளை உபயோகிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ஏற்பட்டுள்ள தாக்கத்தின் இயல்புநிலை பற்றி அறிந்துகொள்வதற்காக அவர்களிடம் முன்வைக்கப்பட்ட திறந்த கேள்விக்கு அமைய, அவர்களுடைய பதில்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 5 - நீங்கள் இந்திய இழுவைப்படகுகளினால் எவ்விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்ற கேள்விக்கான பதில்கள் (N=569 -மேலதிகமான பதில்கள்)

| | வலைகளுக்கான பாதிப்பு/ இழப்பு | வருமான இழப்பு | மீன்பிடி நாட்களின் இழப்பு | மீன் வளங்களின் இழப்பு |
|---|---|---|---|---|
| வீச்சு | 314 | 322 | 407 | 383 |
| சதவீதம் | 55.2% | 56.6% | 71.5% | 67.3 |

இந்திய மீனவர்களால் இடப்படுகின்ற கண்ணுக்குப் புலப்படாத வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் இழுத்துச் செல்லப்படுகின்றமையானது, மீன் வளங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அல்லது காணாமல் போதல் என்பவை மிகவும் எடுத்துக்காட்டக்கூடிய இழப்புக்களாகக் காணப்படுகின்றன. யுத்தத்திற்குப் பின்னர், தங்களுடைய வலைகள் காணாமல் போகின்றமை பற்றி, 314 பதிலிறுப்பவர்கள் கூறி இருக்கின்றார்கள். இரு கிராமங்களில் ஏற்பட்ட இழப்புக்களின் புள்ளிவிபரம் அட்டவணை (6) கீழே தரப்பட்டுள்ளது.

அட்வணை 6 - இயந்திர அழிவுகளினால் இரண்டு கூட்டுறவு கிராமங்களில் ஏற்பட்ட நிதி இழ்ப்புக்கள்.

| | காரைநகர் மீனவ கூட்டுறவுச் சங்கம் | மாதகல் மீனவ கூட்டுறவுச் சங்கம் |
|---|---|---|
| அறிக்கைக் காலம் | 2010 பெப்ரவரி 1 தொடக்கம் 2011 ஏப்ரல் 1 வரை | 2009 ஜூலை 1 தொடக்கம் 2011 ஒக்டோபர் 1 வரை |
| அறிக்கை நீடிக்கும் காலம் | 14 மாதங்கள் | 26,5 மாதங்கள் |
| கூட்டுறவுச் சங்கத்தினுடைய படகுகளின் எண்ணிக்கை | 43 | 83 |
| டோலர்களுடனான சம்பவங்கள் | 76 | 124 |
| பாதிக்கப்பட்ட வலை உரிமையாளர்கள் | 52 | 110 |
| இழந்த வலைகளின் மொத்தப் பெறுமதி | 476.5 | 769.5 |
| நிதி இழப்புக்கள் (இலங்கை ரூபா) | 2,898,000 | 6,459,100 |
| ஒரு படகுக்கான சராசரி இழப்பு (இலங்கை ரூபா) | 67,395 | 77,820 |

இலங்கை மீனவர்கள், இந்திய இழுவைப் படகுகள்வரும்என எதிர்பார்த்திருக்கும்இரவுகளில், தங்களுடைய வலைகள் காணாமற் போகலாம் என்ற உள்ளச்சத்தால் அத்தகைய இரவு நேரங்களில் கடலுக்குப் போவதைத் தவிர்த்து எச்சரிக்கையாக இருக்கின்றனர். சனி, திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் தான் இந்திய இழுவைப் படகுகள் பாக்குக்குடா பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இந்திய இழுவைப்படகுகளின் வருகையை முன்னெதிர்வு கூறமுடிகின்றது. இவ்வாறான நாட்களில், இலங்கை மீனவர்கள் கடலில் பாரியளவிலான இடையூறுகளை எதிர்பார்ப்பதுடன், எல்லோரும் ஒன்று சேர்ந்து கரையை அல்லது அண்டிய பிரதேசங்களில் மீன்பிடியை மேற் கொள்கின்றனர். அல்லது இதனால், 71.5% வீதமானோர் தத்தமது வீடுகளிலேயே தங்கியும் விடுகின்றனர். மீன்பிடி தினங்களை இழப்பதற்குக் காரணமாகின்றது. (அட்டவணை 5 ஐப் பார்க்க)

**காரைநகர் கடற்கரையின் ஊடீ**

டோலர்கள் இல்லாத இரவில் பி.ப. 4 மணியளவில் காரைநகர் கடற்கரையானது சுமார் 100அதிகமான பைபர் படகுகளில் வலைகள், எரிபொருள், சிகரட், உணவு, ஒளிவிளக்குகள் என்பன ஏற்றப்பட்டு கடலுக்குச் செல்ல ஆயத்தமாகின. பி.ப. 4.30 ஆகின்ற போது கடலோரம் வெறிச்சோடிக் கிடந்தது. பி.ப. 5 மணியாகின்ற போது, டோலர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மீனவர்களுக்குமிடையில் நடைபெறும் சம்பாசனையின்போது......

ஒருவர் : நீங்கள் இன்று கடலுக்குச் செல்கிறீர்களா?

மீனவர் : இன்னும் முடிவு எடுக்கேல்ல.

ஒருவர் : ஏன்?

மீனவர் : இரவைக்கு டோலர்கள் வருதே.

ஒருவர் : இனி...?

மீனவர் : நான் போனால் மீன் பிடிப்பதற்கு முன்னரே திரும்பவேண்டி வரும். அப்ப கோளையாவுக்கான கூலியும், எரிபொருளும் விணல்லவே.. ஆனாலும் உணவுக் காக நான் போய்த்தானாகவேண்டும்.

ஒருவர் : அப்ப நீ என்ன செய்யப் போற.

மீனவர் : பாப்பம். 8 மணிவரை அவர்களைக் காணாட்டி நான் போவன். ஆனால் கரைக்கு அண்மையிலதான் மீன் பிடிப்பேன். கடந்த வாரம் என்ர கூட்டாளி 50000 ரூபா பெறுமதியான வலைகளை இழந்திட்டான். நாம எப்படி ஐயா வாழ்றது?

இந்திய இழுவைப் படகுகள் இருக்கின்ற அல்லது இழுவைப்படகுகள் அற்ற இரவுகளில், காரைநகர்ப் பிரதேசங்களில் பிடிக்கப்படுகின்ற மீன்களின் பெறுமதிகளுக்கிடையிலான வித்தியாசங்களை அட்டவணை 7 காட்டுகின்றது. பிடிக்கப்படுகின்ற மீன்களின் தொகைகளை அடிப்படையாகவைத்துப் பார்க்கின்ற போது, 75 சதவீதமான (ஏல விற்பனை மற்றும் 2 தனியார் வியாபாரிகள்) மொத்தக் கிடப்பில், வருடத்திற்குக்கிட்டத்தட்ட 6 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான வருமானத்தை இழப்பதுடன், மீனவர்களின் தலா வருடாந்த வருவாயில் 2 சதவீதமான 40,000 ரூபாவையும் இழக்க நேர்கின்றது. தவிரவும் ஆழ்கடலில் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு அதிகளவில் கிராக்கியும் வர்த்தகர்களும் காணப்படுவதுடன், கரையை அண்மித்த பகுதிகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு குறைந்தளவு கிராக்கியும் உள்ளூர்ச் சந்தையுமே காணப்படுகின்றதை வலது பக்க அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் பெறுமதிகளும் உண்மையான வருமான இழப்பினை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானதாக இல்லை. இந்திய இழுவைப்படகுகள் இல்லாத நாட்களிலேதான் இலங்கை மீனவர்கள் அதிகளவு மீன்களைப் பிடிக்கின்றனர்.

அட்டவணை 7: இழுவைப்படகுகள் அற்ற மற்றும் இழுவைப்படகுகள் வருகின்ற நாட்களில் பிடிக்கப்படும் மீன்களின் பெறுமதி (இலங்கை ரூபா) வித்தியாசங்கள்.

| **தரவு மூலம் :**<br>**காலம் :**<br>**மீன்பிடி இரவுகள்:** | **ஏல விற்பனை**<br>**2010 ஜுன் 1 - 2011 மே 1**<br>**பிடிக்கப்பட்டவைகளின் மொ.பெ** | **தனியார் வியாபாரி**<br>**2011 செப்டெம்பர்**<br>**பிடிக்கப்பட்டவைகளின் மொ.பெ** |
|---|---|---|
| வெள்ளி - சனி (டோலர் இல்லாத நாட்கள்) | 3,597,940 | 83,762 |
| சனி - ஞாயிறு (டோலர் நாட்கள்) | 3,189,420 | 25,349 |
| ஞாயிறு-திங்கள் (டோலர் இல்லாத நாட்கள்) | 3,981,780 | 197,486 |
| திங்கள் - செவ்வாய் (டோலர் நாட்கள்) | 2,299,740 | 48,270 |
| செவ்வாய்-புதன்(டோலர் இல்லாத நாட்கள்) | 3,522,560 | 95, 160 |
| புதன் - வியாழன் (டோலர் நாட்கள்) | 2,418,360 | 67,686 |
| டோலர் இல்லாத மொத்த நாட்கள்) | 11,102,280(58%) | 376,408, (73%) |
| மொத்த டோலர் நாட்கள்) | 7,907,520 (42%) | 141,305, (27%) |
| இழக்கப்படும் வருமானம் | 3,194,760 | 2,821,242 |

மூலம்: அம்பாள் மீனவ கூட்டுறவுச் சங்கம், காரைநகர் மற்றும் அன்னை கடலுணவு (Annai Seafoods)

இவ்விதமான இழப்புக்கள் உள்ளூர்ப் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. படகு உதவியாளர்கள் வாரத்துக்கு 3 நாட்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதால் மாத்திரம் தமது வாழ்க்கைச் செலவை முடிவதில்லை. அவர்கள் நகரை நோக்கிக் கூலித் தொழில்கள் செய்வதற்காகச் செல்கின்றனர். இதனால் தொழிலாளர் தேவை ஏற்படுகின்றபோது அவர்களுடைய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றுகின்றது. இந்துமத மீனவர்கள், இந்து மத விசேட தினங்களில்கூட இந்திய இழுவைப்படகுகள் இல்லாத நாட்களில்,

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டி ஏற்படுவதாக காரைநகர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் குறிப்பிடுகின்றார். சில மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் இலாபமீட்ட முடியாததால் அதனை விட்டுவிடக் கூடியநிலைமையும்தோன்றியுள்ளது. பாவனைக்குப் பயன்படுத்தப்படாது வீணே கிடக்கின்ற படகுகள் இந்தக் கரையோர கிராமங்களில் காணப்படுவது இதனைச் சிறந்த முறையில் விபரிக்கின்றது.

இத்தகைய மீனவர்களுக்குக் குறிப்பிடத்தக்க நேரடித் தாக்கங்கள் இருந்த போதிலும் அவர்கள் குறைந்த அளவு புலப்படுகின்ற அம்சங்களைப் பற்றியே ஆக்ரோஷமாக முறையிடுகின்றனர். அதாவது இந்திய மீனவர்களால் உபயோகிக்கப்படும் இழுவைப்படகு மூலம் ஏற்படும் வலை அழிவு பற்றியது ஆகும். "இந்த இழுவைப்படகுகள் எல்லாவிதமான மீனினங்களையும் காவிச் செல்கின்றன; இது இவ்வாறு தொடருமானால், எங்களுடைய பிள்ளைகளுக்கு கிடைக்கப்போவது என்ன?" என ஒரு மீனவர் வினவுகின்றார். அத்துடன், கீழ்ப்படிவுகளையும் காவிச் செல்லும் தன்மை கொண்ட இழுவைப் படகுகளினால் கடலின் மேற்பகுதி துடைத்தெறியப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. (e.g.pauly et al. 2002). முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, அதிகளவு இலாபமீட்டுவதற்காக எல்லை தாண்டிய மீன்பிடியில் பாக்குக் குடாவானது இலக்காவதால் அளவுக்கதிகமாக வளம் சூறையாடப்பட்டு வருகின்றது. அதாவது பேர்கஸ் மற்றும் அவருடைய சகாக்கள் (2006) குறிப்பிட்டதைப் போன்று "கடற்கொள்ளைக்காரர்களால்" இந்தப் பாக்குக் குடா அளவுக்கதிகமாக சூறையாடப்பட்டு வருகின்றது. 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் நான்காம் திகதி இலங்கை எல்லையினுள் டோலர்படகுகள் செல்வதுதடைசெய்யப்படிருப்பதனால், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகளின் சுதந்திரமான நடமாட்டம் சகித்துக் கொள்ளக்கூடிய தொன்றாக இல்லை. இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவது குறித்து எமக்கு ஏதும் கரிசனை இல்லை. ஆனால் அவர்களுடைய இழுவைப்படகு வலைகள் எமக்குள்ள பிரச்சினை" என்ற கூற்றை வினாக்கொத்துக்கு பதிலளித்த 65 சதவீதமானோர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### 7) இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைவது தொடர்பாக மீனவர்களின் பதில்கள்

வடபகுதி மீனவர்கள் இழுவைப்படகுகளினால் ஏற்படுகின்ற சவால்களுக்கு எவ்விதம் கூட்டாக நின்று தங்களது துலங்கலை வெளிக்காட்டுகின்றார்கள் என்பது பற்றியே நாம் விசாரணை செய்துள்ளோம். இதனுடன் தொடர்புபட்டவகையில், மீனவர் களின் ஆரம்ப நிலைப் பிரதிநிதித்துவமாக செயற்படக்கூடிய மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் கவனிக்கத்தக்கனவாகும். இது வட மாகாணத்தில் ஒவ்வொரு படகுத்துறை நிலையங்களிலும் செயற்படுவதோடு, பல சங்கங்களில் கூட்டாகச் சமாசமும் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளது. யாழ்ப் பாண மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் கூட்டாக ஒழுங்கமைக்கப்பட்ட வடமாகாணத்தில் பரந்து காணப்படுகின்ற மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றாவது படிநிலை அமைப்புமாகும். கடந்த தசாப் தங்களில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் செயற்படக்கூடிய கூட்டுறவு இயக்கங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்துள்ளன. (Amarasinghe and Bavinck 2011). இருந்தும் வடக்கில் செயற்படக்கூடிய மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் மீனவ விவகாரங்களில் முக்கியமான வகிபாகத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன. (Shanmurugan 2003).

2011 பெப்ரவரி மாதத்தில் இந்திய இழுவைப் படகுகள் வட இலங்கை மீனவர்களால் கைப்பற்றப் பட்டன. இது ஊடகங்களின் அவதானத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தன. இதைத் தவிர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வேறெந்த நட வடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. சுமார் 100 மாதகல் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மீனவர்கள், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முன்னால் தங்கள் வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு வெட்டப்பட்ட வலைகளை காட்டியவண்ணமும்

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மீனவ கூட்டுறவு சம்மேளனமானது, இலங்கை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் ஆகியோருக்கும் தங்களுடைய இந்த மோசமான நிலையை இல்லாமல் செய்யக்கோரி பெருமளவிலான கடிதங்களையும் எழுதினார்கள். அத்தோடு இந்த மீனவ கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஊடக ஆதரவு அல்லது கவனத்தையும் தேடி ஒரோர் சமயம் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டும் உள்ளனர். மேலும் 2011 மார்ச் மாதம் உருவாக்கப்பட்ட வட மாகாண மீனவ மக்கள் கூட்டமைப்பானது, வடக்கின் அனைத்து மீனவ கூட்டுறவுச் சங்கங்களோடும் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான ஒரு கூட்டுக் களமாக விளங்கக்கூடிய சிறந்தொரு முயற்சியாக இருக்க இயலும். மீனவ தலைவர் களுக்கிடையில் காணப்படக்கூடிய உள்வாரியான போட்டித்தன்மை, பிளவு மற்றும் அரசியல் தலையீடுகள் போன்றவற்றின் காரணமாக இந் நிறுவனமானது ஆரம்பித்த முதல் வருடத்திலேயே மிகவும் பின்தங்கிய நிலையிலேயே செயற்பட்டது. இருந்தபோதும், இந்த விடயமானது தங்களது பிரச்சினைகளுடன் தொடர்புபட வருகின்ற சந்தர்ப் பத்தில் மீனவத் தலைவர்கள் செய்வதறியாது நிலை குலைந்துள்ளனர். எங்களது வாதத்தின் பிரகாரம் இதற்கு மூன்று உள்ளிணைந்த காரணிகளே காரண மாக அமைந்துள்ளன.

விடுதலைப்புலிகளின் காலத்திற்குப் பின்னரான அரசியல் சூழ்நிலை தமிழ் மீனவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான மற்றும் தங்களது போராட் டங்களைத் தங்களுடைய கைகளுக்குள் கொண்டு வருதற்கான இயலுமையைக் கட்டுப்படுத்தியது. மீனவத் தலைவர்களுக்கு இருந்த அச்சத்தின் விளைவாக, ஆரம்பிக்கப்படவிருந்த இரு ஆர்ப் பாட்டங்கள் கூட இரத்துச் செய்யப்பட்டன. மீனவ இழுவைப் படகுகளை விரட்டியடிக்க முயற்சித்த யாழ்ப்பாண மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தமையானது. இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது.

இரண்டாவது, தமிழ்நாடு மற்றும் இழுவைப் படகுகள் மீதான மீனவர்களின் நிலைப்பாடு இரு வெவ்வேறு நிலைப்பட்ட தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. தமிழ்நாட்டு இழுவைப்படகுகள் இவர்களின் வாழ்வாதாரத்தில் உக்கிரமான முறையில் தாக்கம் செலுத்துகின்ற போதும் இலங்கையில் நடைபெற்ற சிவில் யுத்த காலத்தில் அகதிகளாகச் சென்றவர்களை, இந்திய மீனவர்கள் ஆர்வத்துடன் வரவேற்றியமுறை மற்றும் விருந்தோம்பல்கள் பாங்கு என்பன இவர்களுக்கு ஆழமான கடப்பாடு உணர்வை உருவாக்கியிருக்கின்றன. (Vivekanandan 2011:12). “இந்திய மீனவர்கள் எங்களது சகோதரர்கள்; மற்றும் நாங்கள் ஒரே கடலின் மூலம் இணைக்கப் பட்டவர்கள்” என்ற பதிலை 67% வீதமான பதிலிருப்பவர்கள் ஏற்றுக்கொண்ட அதேவேளை 55% வீதமானவர்கள் ‘அவர்கள் தற்போது எங்களது எதிரிகளாக மாறியுள்ளனர் ’ என தெரிவித்துள்ள கருத்தானது, அவர்களுடைய உறவில் ஏற்பட் டுள்ள வெவ்வேறு இருபடிநிலைகளை எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்பாண மீனவ சம்மேளனத்தினூடாக, அண்மையில் நடந்த தேர்தல் வெற்றிக்குப் பின்னர் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு எழுதப்பட்ட கடிதம் பின் வருமாறு குறிப்பிடுகின்றது. “மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்களே!... தொப்புள்கொடி மற்றும் இரத்த உறவினைக் கொண்ட எமது சொந்தங்களான தமிழ் நாட்டவர்கள், எங்களது கடற்பரப்பை அவர்களது இழுவைப் படகுகளால் ஆக்கிரமித்து, நாம் கடன்பட்டுப் பெற்றுக்கொண்ட மீன்பிடி உபகரணங்களை அழிப்பதுடன், கடல் வளங்களையும் வழித்துத் துடைத்துக் காவிச் செல்கின்றனர்.” (யாழ்ப்பாண மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனம் 2011) மறுவார்த்தையில் கூறுவதனால், தற்போதைய கசப்பான அனுபவங்கள் மனோ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், தமிழ் நாடானது இலங்கைத் தமிழர்களுக்கு சிவில் யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் நெருங்கிய நண்பனாகவே கருதப்படுகின்றது. இலங்கை தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசாமல் இருப்பதற்கு இதுவுமொரு காரணமாகும்.

மூன்றாவது, கடந்த வருடத்தில் மீனவர்கள் பிராந்திய ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரிக்கப்படுவது அதிகரித்துக் காணப்படுகின்றது. அண்மையில் மீனவ மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட 'கிராமிய மீனவ அமைப்பு' யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து புதிய மீனவத் தலைவர்களை நியமித்ததோடு, இச்செயன்முறையானது மேலும் குழப்பநிலையை உருவாக்கியிருப்பதுடன் மீனவ தலைமைத்துவங்களின் வினைத்திறனையும் தடுக்கின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களின் மொத்த விளைவின் பயனாக, மீனவ சமூகங்களானவை மிக ஆர்வமாக கூட்டாக இணைந்து செயற்படத் தூண்டினாலும், அதிகாரமற்றதன்மை, இயலாமையினால் கிடுக்கிப்பிடியில் வகையாக மாட்டிக்கொண்டுள்ளனர். சட்டத்திலுள்ள சீர்கேடுகளின் விளைவினாலும் மீனவப் பிரதிநிதிகளின் செயற்பாடுகளினாலும் சாதாரண மீனவர்கள் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் மீதான நம்பிக்கையை இழக்கத் தொடங்கியுள்ளனர்.

**8) இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கான அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்தின் பதில்**

கட்டமைப்பு ரீதியாக உருவாக்கம் பெற்றுள்ள முயற்சிகள் இம்மோதலுக்கு தமது போராட்டம் தொடர்பாக குரல் எழுப்ப முடியாமையானது மீனவ பிரதிநிதிகளின் இயலாமையை எடுத்துக் காட்டுகின்றது. இங்கு இருவகையான கட்டமைப்பு முயற்சிகள் விபரிக்கப்படுகின்றது. இரு சாரார் மட்டத்தில் இரு அரசாங்கங்களினதும் இம்முரண்பாட்டுடன் தொடர்புபட்ட அமைச்சுக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் இருபக்க கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. இரு தரப்பு மீனவர்களுக்கிடையிலும் கலந்துரையாடல்களை ஆரம்பித்து வைத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் இம்மோதலுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் கிளர்ச்சிக்கு பதிலளிக்கும் முகமாக மீனவ பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையிலான முதலாவது இருபக்க கலந்துரையாடலானது, 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது. (Amarasinghe 2011) இங்கு, மீன்பிடி தொடர்பான இருபக்க இணைந்த செயற்பாட்டுக் குழு ஒன்றினை உருவாக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட இரு நாட்டு அமைச்சர்களுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமானது வரையப்பட்டது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது, 'இரு பக்கங்களில் இருந்தும் தத்தமது கடல் எல்லைகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் படகுகளின் பிரச்சினையைத் தணிப்பதற்கான அவதானிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவும்' அதேபோல் 'மற்றவர்களுடைய நீர் எல்லைக்குள் கவனக்குறைவால் வழிதவறிச் செல்லக்கூடிய' மீனவர்களுக்கு உரிய மாதிரி வழிமுறைகளும் வழங்கப்படவும் நாடியது.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லையாலும் 2008, 2011 மார்ச் மற்றும் அண்மையில் 2012 ஜனவரி மாதங்களில் 3 இணைந்த செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. "இந்திய மீன்பிடிப் படகுகள் அடையாளப்படுத்தப்பட்ட, இக்கட்டான சூழ்நிலைகள் நிலவுகின்ற பகுதிக்குள் நுழையாது" என 2008ஆம் ஆண்டில் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில், இந்த மீனவர்களின் கூட்டறிக்கையானது பரிந்துரைத்திருந்தது. (Joint Statement in Suryanarayan 2009,16) இது மறைமுகமாக இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பின் ஏனைய பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. இந்திய அரசாங்கமானது உண்மையான மீனவர்களுக்கெதிரான வன்முறையானது நியாயப்படுத்த முடியாது என்று அறிவுறுத்தியதோடு சர்வதேச எல்லைக்கோடு என்பது மதிக்கப்பட வேண்டும் என்பதையும் இலங்கை அதிகாரசபைகள் அழுத்திக் கூறியதால்,

*2011 மற்றும் 2012 இணைந்த செயற்பாட்டுக் குழுவின் கூட்டங்கள் கடுமையான கேள்விகள் தவிர்க்கப்பட்டன.*

சூர்யநாராயணன் மற்றும் சுவாமிநாதன் ஆகியவர்களின் (2009, 12) "A silver lining in an otherwise bleak horizon" எனும் கூற்றின்படி, 2004 மே மாதம் தமிழ் நாட்டிலிருந்து ஒரு மீனவ குழுவை இலங்கையின் வட பகுதிக்கும், 2010 ஆகஸ்ட் மாதம் வட இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கும் அழைத்துச் சென்று மோதல் குழுக்களுக்கிடையில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. விவேகானந்தன் (2004), 2004ஆம் ஆண்டு கலந்துரையாடலின் விளைவுகளைச் சுருக்கமாக இந்திய மீனவர்களின் நோக்கிலிருந்து குறிப்பிடும் போது "தன்மை (உதவி)யை நாடிப்போய் படிப்பினையை பெறுதல் (பிடித்தல்)" (Fishing for a Favour, Netting a Lesson) எனக் குறிப்பிட்டுள்ளார். இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களிடமிருந்து இலங்கை கடற்பரப்பில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை நாடியபோது, இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களின் இழுவை (டோலர்) வலையை விரித்து மீன்பிடிக்கும் நுட்பத்தினை உறுதியாக மறுத்ததால், இந்த மாற்றத்திற்கு சிலகாலம் தேவைப்படுமென்றும் அரசாங்கத்தின் உதவியும் அவசியம் என்றனர். 2010ஆம் ஆண்டு இவர்களது "பதில் வருகை" யின்போது 23 இலங்கை மீனவர்கள் இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து நாகப்பட்டினம் வலை யிலான இந்திய கரையோர சுற்றுப் பயணத்திற்கு பலமான வரவேற்பளிக்கப்பட்டது. இந்த இரண்டு நாள் பயணத்தின்போது சென்னையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் விரிவான உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டதோடு இந்த உடன்படிக்கையின் படி, இந்திய இழுவைப் படகுகள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு கடுமையான நடைமுறையில் சாத்தியமான மற்றும் இடரீதியான கட்டுப்பாட்டினடிப்படையில் மட்டும் அனுமதி யளிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டது. (உதா ரணம் வருடத்திற்கு குறிப்பிட்ட 70 நாட்கள்) இந்த கட்டுப்பாடானது ஒரு வருடத்திற்குள் காலாவதியாக்கி இதன் பிறகு எல்லாவிதமான டோலர் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. (Vivekanandan 2010b) இந்த ஒப்பந்தமானது இரு நாட்டு அரசாங்கங்களின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்ட போதும், பின்வரும் கூற்றின டிப்படையில் அது நிராகரிக்கப்பட்டது. "சென்னை கலந்துரையாடலின்போது யாழ்ப்பாண மற்றும் தமிழ் நாட்டு மீனவ சமூகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இந்த முன்மொழிவானது இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது இந்திய அரசாங்கத்தினாலோ மதிப்பிடப்பட்டதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்."

இருப்பினும் இந்த பரிமாற்றமானது உண்மையாகவே மோதலுடன் தொடர்புபட்ட மீனவர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தினாலும் இரு தரப்பு அரசாங்கங்களும் நிர்வாகங்களும் இதற்கு ஆதரவு அளிப்பதாக உத்தியோகபூர்வமான அறிக்கைகள் விட்ட போதிலும், இருசாரார் கூட்டு செயற்குழுக் கூட்டங் களில் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மீனவர்களது கண்ணோட்டம் கருத்தில் எடுக்காதிருந்தது போல், மீனவர்களுக்கிடையிலான உடன்படிக்கைகள் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு கரிசனைகள் உள்ளடக்காமல் எடுக்கப்பட்டன. உண்மையாகவே இது சில பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கினா லும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார கண் ணோட்டத்தில் பார்க்கின்றபோது சர்வதேச கடல் எல்லைக் கோட்டு நிபந்தனைகளை மீனவர்கள் தீர்மானிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகவும் காணப்படுகின்றது. இதனூடாக பார்க்கும் போது கூட்டுச் செயற்குழுவிற்கும் மீனவத் தலைவர்களுக்குமிடையே ஒருபோதும் ஒன்றிணைந்த கலந்துரையாடல்கள் இடம் பெறவில்லை என்பதை முக்கியமாக குறித்துக்

காட்ட வேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியாக நின்று தீர்வை தேடுவதை விட மீனவர்களுக்கு அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுவதே அவசியமாயுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இது சிறந்த படிப்பினையாகக் காணப்படுகின்றது.

### 9) முடிவுரை

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் மீனவர்களின் மோதலானது மீன்பிடித்தல் உரிமைகளை நிர்ணயிப்பது என்பதைச் சுற்றியே காணப்படுகின்றது. அதாவது யார், எப்போது, எங்கே மற்றும் எவ்வாறு மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பற்றியே காணப்படுகின்றது. உள்ளக மற்றும் வெளியக மோதல்கள் முக்கியமான வேறுபாடாகக் கொண்டு பொருத்தமான நிறுவனங்கள்தான் மோதல்களைத் தீர்ப்பதற்கான மையகாரணியாகக் காணப்படுகின்றது என்ற கருத்தை முன்வைத்தோம். பாக்குக்குடா மோதலின் தன்மை மற்றும் தீர்க்கப் படமுடியாத இயல்பும் இந்த சட்டகத்தின் ஊடாக சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்களின் வாழ்வாதார நலன்கள் நிறைய காணப்படுகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்பது இங்கு தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வாத மீன்பிடி முறைமைகளைப் பயன்படுத்தி தங்களுடைய மீன் வளங்களை இந்திய மீனவர்கள் கைப்பற்ற முயல்வதால் மீண்டும் தமது தொழிலை ஆரம்பித்துள்ள பாரியளவான இலங்கை மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். மீன்பிடி உரிமைக்கான ஒதுக்கீடு, இடம் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியான பரிமாணத்தின் தெளிவான வித்தியாசங்கள் ஆகியன இந்த நலன்களை அடைந்து கொள்வதற்கான போட்டிக்கு காரணங்களாக காணப்படுகின்றன. இலங்கை சிவில் யுத்தமானது பாக்குக்குடாவினுள் பாதுகாப்பு மயப்படுத்தியமை, இரு தரப்பு மீன்பிடித்துறைகளிலுள்ள சமத்துவமற்ற தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தமிழ் மற்றும் சிங்கள பிரிவினைவாதமானது அரசியல் மயப்படுத்தப்பட்டமை போன்ற காரணிகள் பதற்ற நிலையை மேலும் அதிகரித்தது. இம் மோதலானது கீழ்மட்ட மீனவர்களினதும் உயர்மட்ட அரசாங்க தரப்பினரதும் பல்துருவ ஆட்சியலில் முயற்சிகளை ஏற்படுத்தி துண்டு துண்டாகப் பிரிந்ததால் தங்கள் இலக்குகளைத் தவற விட்டுள்ளன. இம் மோதலுக்கான தீர்வினை அல்லது கட்டுப்பாட்டு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஒரு பாரிய நிறுவனம் இல்லாதிருந்தால், வெளியக மோதல்களுக்கான சிறந்த உதாரணமாக பாக்குக்குடா மோதல் இருந்து வருகின்றது. மேலும் மீனவ தொழில்நுட்பம் மற்றும் புவிசார் அரசியல் ஆகிய பக்கங்களில் அதிகாரச் சமநிலையானது இந்தியாவின் பக்கம் சாய்ந்ததாகவே காணப்படுகின்றது. இது இம்மோதலானது மிகவும் சமச்சீரற்ற வடிவத்தைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதன்படி ரெபோபோட் (1974) டினுடைய கருத்துப்படி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுக்கு வருவதற்கு மேலாதிக்க சக்திகொண்ட தரப்பினரின் அதிகாரம் இன்னுமொரு தடையாகக் காணப்படுகின்றது.

இவ்விதமான சமச்சீரற்ற மற்றும் வெளியக மோதல்களைக் காத்திரமான முறையில் அணுகுவது சிரமமாகும் என்பதை நாம் எடுத்துக்கூறியுள்ளோம். இதன் இறுதி முடிவு யாதெனில் இந்திய மற்றும் வட இலங்கை மீனவ சமூகங்களின் வறிய வாழ்க்கை நிலைமையும், இலங்கை மற்றும் இந்திய இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகள் ஒப்பிட்டு ரீதியாக சிறிய மற்றும் மோதலுக்கு அப்பாற்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துவதேயாகும்.

தற்போது காணப்படக்கூடிய பல்வேறு வகையான முன்மொழிவுகள் தீர்வு வழங்குவதற்கு உகந்தவையல்ல என்பதையும், குறைந்தது மோதலில் மையக் குணாதிசயங்களுக்கு பதிலளிக்கவில்லை என்பதையும், எங்களது பகுப்பாய்வானது எடுத்துரைக்கின்றது. இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு வெவ்வேறு நாள்களில் மீன் பிடித்தலுக்கு அனுமதியளித்தல் இதுதான் தற்போதைய உண்மை நிலைமை. இந்திய இழுவைப் படகுகளுக்கு GPS அல்லது

முன்னறிவிப்பு முறைமையொன்றினை வழங்குதல் (இந்திய மீனவர்கள் எல்லைப் பரப்பை சிறப்பாக அறிவார்கள்) பாக்குக் குடாவை அனைவருக்குமான பொது மீன்பிடித் தளமாக மாற்றுதல் (சமுத்துவமற்ற தொழில்நுட்ப இயலுமை பற்றி இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை.) களஞ்சிய அபிவிருத்தியை ஊக்குவித்தல். (ஒதுக்கீடு பற்றிய விடயம் தவறவிடப்பட்டுள்ளது) மற்றும் இறுதியாக கச்சைதீவை இந்தியாவுக்கு குத்தகைக்கு விடுதல் அல்லது பெற்றுக் கொள்ளுதல் (இழுவைப் படகுகளின் செயற்பாடுகள் கச்சைதீவிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள கடற்பிரதேசத்திலேயே மேற்கொள்ளப் படுகின்றது என்பது தவறவிடப்பட்டுள்ளது.) எங்களது பகுப்பாய்வினால் மோதலுக்கு ஒரு தீர்வினை வகுத்துரைக்க முடியாதபோதிலும் தீர்வினை நோக்கிய பல அவசியமான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.

முதலாவதாக இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான தற்போதைய நிலைமையில் இம்மோதலானது முக்கியமான ஆயுதப்படைகளுக்கும் அத்துமீறும் மீனவர்களுக்குமிடையில் நடைபெறும் மோதல் என்பதற்குப் பதிலாக தொழில் நுட்ப ரீதியாக சமமற்ற இரு மீனவ குழுக்களுக்கிடையிலான மோதல் என்பதாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இரண்டாவது : மீனவ முகாமைத்துவ பிரச்சினையாக காணப்படுகின்ற தமிழ் நாட்டு இழுவைப் படகுகளின் அளவுக்கதிகமான முதலீடு இம்மோதலைத் தொடர்ந்து கொண்டும் செல்லும் உந்துசக்தியாகக் காணப்படுகின்றது என்பதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இந்த தமிழ்நாட்டு இழுவைப் படகுகளின் போக்கு அடிப்படையாக மீள்கட்டமைக்கப்பட வேண்டு மென்பது இந்திய அதிகார நிறுவனங்களினாலும் தொடர்ந்து மேலும் மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒழுங்கான புரிதலும், இழுவைப் படகுகளின் சில பகுதிகள் வாபஸ்பெறப்பட்டும் சில பகுதிகள் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு வழங்கப்படும் விதமாக ஆழ்கடல் வளங்கள் திட்டவட்டமாக வரையப்பட வேண்டும்.

மூன்றாவது : கூட்டு செயற்குழுக்கள் மற்றும் துறைசார்ந்த வல்லுநர்களால் பல கூட்டங்கள் நடத்தப்பட்டு முக்கியமான விடயங்களைத் தொட்டுச் சென்றாலும், மீனவர்களின் உண்மையான பங்குபற்றுதல்கள் இல்லாமல் இம்மோதல் தீர்க்கப்படாது என்பதை அரசாங்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மோதல் பற்றிய தோற்றம், உண்மையான சாத்தியப்பாடு மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு ஆகியவற்றை களத்திலிருக்கும் மீனவர்களே நன்கு அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகவே, அவர்களது ஆதரவு இல்லாத உடன்படிக்கைகளை அமுல்ப்படுத்துவது விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல. அத்துடன், அவற்றை அமுல்ப்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு பாரிய செலவையும் ஏற்படுத்தும்.

நான்காவது : நீண்டகால தீர்வினைக் காண்ப தென்பது செயல்முறைகளை சரியாகச் செய்வது மாத்திரமல்ல. நிறுவன ரீதியாக கட்டியெழுப்பும் நடைமுறையையும் தொடர்வதுமாகும். ரெபோபோட்(1974) டினுடைய கருத்துப்படி சகல தரப்பினரையும் உள்வாங்கக் கூடிய நிறுவன ரீதியான பொறிமுறையொன்று காணப்படாததால் வெளிவாரியான மோதல்களுக்கு பாக்குக்குடா மோதலானது முக்கிய உதாரணமாக காணப்படுகின்றது. ஆகவே, இங்குள்ள பாரிய சவால் என்னவெனில், இந்த வெளியக முரண்பாட்டை உள்ளக ஒன்றாக மாற்ற சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை ஒன்றினைக்கும் ஒரு தளத்தினையும் தொலை நோக்கையும் உருவாக்குவதாகும்.

**நன்றியுரை**

நாம் முதலில் மீனவர்கள் மற்றும் கூட்டுறவு சங்க தலைவர்களுக்கும், முக்கியமான வினாக்கொத்தினை ஒழுங்குபடுத்தித்தந்ததிரு.இராஜசந்திரன்மற்றும்திரு. தவரத்தினம் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் கள மொழிபெயர்ப்பாளராக செயற்பட்ட நிலாம் ஹமீட் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இறுதியாக இவ்வாய்விற்காக நிதியுதவி வழங்கிய டச்சு நிறுவனமான COCOON programme (NWO/WOTRO project number W076830200) நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## உசாத்துணை

i. இலங்கை கடற்படை அல்லது கரையோரப் பாதுகாப்புப் படைகளினால் 500 க்கும் மேற்பட்ட இந்தியத் தமிழ் மீனவர்கள் கொள்ளப்பட்டதாக http://www.savetnfisherman.org எனும் இணையத்தளம் குறிப்பிடுகின்றது.

ii. 2001 ஆம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் இந்திய உற்பத்தியில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்திய பாக்குக்குடா உற்பத்தி பிரதேசங்களாக புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் இராமனாத் மாவட்டதின் 70 விதமான பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (எஞ்சிய 30 விதமும் மன்னார் குடாவாகும்). இலங்கையின் மீன் உற்பத்தி பிரதேசங்களாக யாழ்ப்பாணம் , மன்னார் மாவட்டங்கள் காணப்படுகின்றன.

iii. 28631 குடும்பங்களின் 17501 குடும்பங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொகையானது களப்புக்களிலும் மன்னார் குடாவிலும் மற்றும் மன்னார் தீவுகளிலும் மீன்பிடிக்கும் மீனவர்களை உள்ளடக்கப்படவில்லை.

iv. அமரசிங்கவின் (2001) கருத்துப்படி இலங்கையானது வருடத்திற்கு 33 மில்லியன் தொடக்கம் 77 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொகையை இழக்கின்றது.

v. இந்த சட்டமானது, 1970 களில் இறுதிப் பகுதியில் சிறியரக படகுகள் மற்றும் டோலர்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்ட 3-4 நாட்கள் சட்டம் அமுல்படுத்தப்பட்டன. இச்சட்டமானது நாகப்பட்டினம் , யாழ்ப்பாண மாவட்டத்தின் வட கிழக்கு பிரதேசத்தில் எல்லா நாட்களிலும் செயற்படும் படகுகளுக்கு அமுல்ப்படுத்தப்படவில்லை.

vi. வியாழக்கிழமை இரவு நாட்களில் மீனவர்கள் மதக் கிரியைகளுக்கு செல்வதால் வெள்ளிக்கிழமை இதனுள் உள்வாங்கப்படவில்லை.

vii. வர்த்தமானி இலக்கம் 1665/ 16 இன் உறுப்புரை நான்கின் படி இலங்கை கடற்பரப்பினுள் டோலர்கள் செல்வதும் ஏனைய நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது எனவும் குறிப்பிடுகின்றது.

viii. தென்னிந்திய மீன்பிடி சமூக கூட்டமைப்பு (SIFFS), அப்பாவி மீனவர்களை விடுவிப்பதற்கான முன்னனி (ARIF) FishMarc ஆகியன இந்தியபுறத்திலும் இலங்கை புறத்திலிருந்து கரிடாஸ் (cartias) மற்றும் மீனவ ஒருமைப்பாட்டிற்கான தேசிய முன்னணி (NAFSO).

ix. NAFSOவுக்கு 2010 செப்டெம்பர் முப்பதாம் திகதி இலங்கை மீன்பிடி அமைச்சு அனுப்பிய கடிதத்திலிருந்து பெறப்பட்டது.

x. உதாரணமாக , http: www. thehindu.com / news/cities/chennai/article2747704.ece